## அலகு - 8

## திசைகள்

01) அதிகாலை உடற்பயிற்சிக்காக கடற்கரைக்கு சென்ற குமார் சூரியன் உதிக்கும் திசையைப் பார்த்தவாறு இருகைகளையும் நீட்டியவாறு படத்தில் காட்டியபடி நிற்கின்றார்.





பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

1) சூரியன் உதிக்கும் திசை யாது? ........................................................................................

2) குமாரின் வலக்கைப் பக்கம் குறித்து நிற்கும் திசை யாது? ..............................................

3) குமாரின் நிழல் எத்திசையில் தென்படும்? ...................................................................

4) குமாரின் இடக்கை பக்கம் குறித்து நிற்கும் திசையை எழுதுக. ......................................

02) பின்வரும் உருவில் அம்புக்குறி குறிக்கும் பொருத்தமான திசைகளைத் தெரிவு செய்து எழுதுக.

கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு



03) பின்வரும் வெற்றுக்கூடுகளில் பொருத்தமான திசைகளை எழுதுக.




04) ரமணனின் வீடும் அதைச் சுற்றியுள்ள சில இடங்களின் அமைவும் கீழுள்ள படத்தில் காட்டப்பட்டுள்ளது.




| | | |
|---|---|---|
| • தபாலகம் | • சந்தை | • பாடசாலை |
| • தேவாலயம் | • வீடு | • மைதானம் |
| • தொடருந்து நிலையம் | • பேரூந்து நிலையம் | • வைத்தியசாலை |

The National e-learning Portal for The General Education

1) வீட்டில் இருந்து வைத்தியசாலை அமைந்துள்ள திசை யாது? .......................................

2) தேவாலயம் வீட்டில் இருந்து ................................................ திசையில் அமைந்துள்ளது.

**3) தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| வீட்டில் இருந்து மைதானம் அமைந்துள்ள திசை | தெற்கு |
| தபாலகத்தில் இருந்து வீடு அமைந்துள்ள திசை | வடகிழக்கு |
| பேரூந்து நிலையத்தில் இருந்து மைதானம் அமைந்துள்ள திசை | கிழக்கு |
| சந்தையில் இருந்து வீடு அமைந்துள்ள திசை | தென்கிழக்கு |

05) ஒரு உடற்பயிற்சி கண்காட்சிக்காக தலைவரை நோக்கியவாறு எட்டு மாணவர்கள் $A$, $B, C$, $D$, $E$, $F$, $G$, $H$ என்னும் ஒழுங்கில் நிற்பதனை கீழுள்ள உரு காட்டுகின்றது.

| | | |
|---|---|---|
| $A$ | $B$ | $C$ |
| $H$ | தலைவர் | $D$ |
| $G$ | $F$ | $E$ |

பின்வரும் வினாக்களிற்கு விடை தருக.

1) தலைவருக்கு வடமேற்குத் திசையில் நிற்பவரைக் குறிக்கும் எழுத்து யாது?

.......................................................................................................................

2) $H$ என்பவருக்கு எத்திசையில் தலைவர் உள்ளார்? ..........................................................

3) பின்வரும் கூற்றுக்களில் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✕) எனவும் குறிப்பிடுக.

(i) $C$ என்பவர் தலைவரிற்கு வடகிழக்கு திசையில் உள்ளார். (      )

(ii) $F$ இற்கு வடக்குத் திசையில் தலைவரும் $B$ யும் உள்ளனர். (      )

(iii) $E$ இற்கு கிழக்குத் திசையில் தலைவர் உள்ளார். (      )

4) தலைவர் குறித்து மணிக்கூடு சுற்றும் திசையில் எட்டு மாணவரும் ஒரு அமைவு மாறினால் ($E$ என்பவர் $F$ இற்கும், $F$ என்பவர் $G$ இற்கும் என்றவாறு)

(1) தலைவரிற்கு மேற்குத் திசையில் நிற்பவர் யார்? ......................................................

(2) $C$ யிற்கு இடப்புறமாக ........................ என்பவரும் வலப்புறமாக ........................ என்பவரும் உள்ளனர்.